**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Monthly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 Multidisciplinary International
Issue DOI: https://doi.org/10.63300/tm12032026

**Vol. 12 No. 03 (2026): August 2026**, **p414-421** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper*

# சூளாமணியில் கலிவிருத்தம்

## Kaliviruttams in the Sulamani

**சரவணக்குமார் ர,**

*பதிவு எண்: MKU23FFOL10834, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. மதுரை, தமிழ்நாடு, இந்தியா.*

**Saravanakumar R*,**

*Reg. No.: MKU23FFOL10834, Tamil Research Scholar, Thiagarajar College,*
*Affiliated to Madurai Kamaraj University, Madurai, Tamilnadu, India. Email: dhilipsaravanan1999@gmail.com*

**முனைவர் அ. மோகனா,**

*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. மதுரை, தமிழ்நாடு, இந்தியா.,*

**Dr. A. Mohana,**

*Assistant Professor of Tamil, Thiagarajar College, Affiliated to Madurai Kamaraj University,*
*Madurai, Tamilnadu, India.*

*Article history*
Received: 20-07-2026
Revised: 30-07-2026
Accepted: **04-08-2026**

*Corresponding Author Email:
*dhilipsaravanan1999@gmail.com*

**Abstract:** In the history of Tamil Epic literature, Sulamani occupies a distinguished position next to Sivaka Sinthamani in terms of literary fame and significance. The original title given to this work by its author, Tholamozhi Thevar is Chenkan Netiyan Charitham. The Epic consists of twelve sarukkams and 2130 verses. This article examines and explains the compositional patterns of the kaliviruttam verses found in the work, based on the principles of Viruttappaviyal. Specifically, it highlights variations in rhyme schemes (etukai and monai), syllable counts, and rhythmic flow (chantham) within the kaliviruttam structures. By mapping these prosodic features against classical metrical rules, the study demonstrates how Tholamozhi Thevar skillfully adapted traditional verse forms to heighten emotional resonance and narrative momentum. Ultimately, this analysis provides deeper insights into the structural brilliance of medieval Tamil Jain epics and contributes to the broader understanding of Tamil metrics (Yappu).

**Keywords:** *Sulamani, Viruttappaviyal, Kaliviruttam.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**DOI: https://doi.org/10.63300/tm12032026.34**

**ஆய்வுச் சுருக்கம்**

காப்பிய இலக்கிய வரலாற்றில் சீவக சிந்தாமணிக்கு அடுத்த நிலையில் மிகப்புகழ் பெற்று விளங்குவது சூளாமணி ஆகும். சூளாமணிக்கு இந்நூலின் ஆசிரியரான தோலாமொழித் தேவர் இட்டப் பெயர் "செங்கண் நெடியான் சரிதம்" ஆகும். இது 12 சருக்கங்களையும் 2130 பாடல்களையும் கொண்டது. இந்நூலில் அமைந்துள்ள கலிவிருத்தங்களின் பயில்வு முறைகளை விருத்தப்பாவியலின் அடிப்படையில் ஆராய்ந்து நோக்கி எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

திறவுச் சொற்கள்: சூளாமணி, விருத்தப்பாவியல், கலிவிருத்தம்

**முன்னுரை**

செந்தமிழ் மொழியின்கண் சிறந்து விளங்கும் பெருங்காப்பியங்களுல் ஒன்று சூளாமணி ஆகும். முதற் விருத்தற்பாக் காப்பியம் என்று அழைக்கப்படும் சீவக சிந்தமாணிக்கு பின் தோன்றினாலும், விருத்தப்பாவைக் கையாள்வதில் தோலாமொழித் தேவர் சீவக சிந்தாமணியின் ஆசிரியரான திருத்தக்கத் தேவரையும் மிஞ்சி விட்டார் என்று மு.வரதராசன் கூற்றிலிருந்து இவர் சூளாமணியில் விருத்தத்தைக் எந்தளவு கையாண்டுள்ளார் என்பதை அறியலாம். இந்நூலின் காலத்தை அறுதியிட்டு கூறமுடியாவிட்டாலும், கி.பி. 9 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று சான்றோர்களால் கருதப்படுகிறது. தோலாமொழித் தேவரால் இயற்றப்பட்ட இந்நூலில் அமைந்துள்ள பாக்களுல் கலிவிருத்தங்களின் பயில்வுமுறைக் குறித்து இங்கு ஆராயப்படுகிறது.

**கலி விருத்தம்**

ஆசிரிய விருத்தங்களுக்கு அடுத்த நிலையில் அதிகளவு காப்பிய ஆசிரியர்களால் கையாளப்படுகின்ற விருத்த வடிவம் கலி விருத்தம் ஆகும். கலிப்பாவின் மூவகை இனங்களான கலித்துறை, கலித்தாழிசை, கலிவிருத்தங்களுல் ஒன்றே கலிவிருத்தம் ஆகும். இதற்கான இலக்கணத்தை,

***"அளவடி நான்கின கலிவிருத் தம்மே"          (யா.க.நூ.89)***

என்று யாப்பருங்கலமும்,

***"நாலொரு சீரான் நடந்த அடித்தொகை***

***ஈரிரண்டாகி இயன்றவை யாவும்***

***காரிகை சான்ற கலிவிருத் தம்மே"          (கா.பா.நூ.79)***

என்று காக்கபாடினியமும்,

*"நாற்சீர் நாலடி கலிவிருத் தம்மே"* *(சிறு.கா.பா.)*

என்று சிறுகாக்கைபாடினியமும் கலிவிருத்தத்திற்கான இலக்கணத்தை எடுத்தியம்புகிறது.

*"காப்பியததிற்குரிய சிறந்த செய்யுள் எனக் கொண்டவை அறுசீர் விருத்தமும், கலி விருத்தமும் என நன்கு புலப்படுகிறது"*

எனத் தா.வே.வீராசாமி கூறியிருப்பது இங்கு நினைவுக்கூறத்தக்கது. குறிப்பாக முதற் விருத்தற்பாக் காப்பியமான சீவக சிந்தாமணி காப்பியத்தில் ஆசிரிய விருத்தத்திற்கு அடுத்த நிலையில் 1109 பாடல்கள் 35.26% கலி விருத்தமாக அமைந்துள்ளதன் மூலம் நாம் கலி விருத்தத்தின் சிறப்பை அறியலாம்.

செந்தமிழ் மொழியின்கண் சிறந்து விளங்கும் பெருங்காப்பியங்களுல் ஒன்றான சூளாமணியில் மூன்று வகை வாய்ப்பாடு அமைப்பு முறைகளில் கலி விருத்தமானது ஆட்சி பெற்றுள்ளது. இக்காப்பியத்தில் தூதுவிடுச் சருக்கம் தவிர்த்து ஏனைய அனைத்து சருக்கங்களிலும் கலி விருத்தப் பாக்கள் பயின்று வந்துள்ளது. மொத்தமுள்ள 2130 பாடல்களில் 683 பாடல்கள் 32.06% கலி விருத்தப் பாடல்களாக அமைந்துள்ளன. சூளாமணியின் முதற்சருக்கமான நாட்டுச் சருக்கம் முழுவதும் கலி விருத்தமாக அமைந்துள்ளது மேலும் ஒரு தனிச் சிற்பபாகும்.

**விருத்தப்பாவியல் சுட்டும் கலிவிருத்தம்**

தொல்காப்பியத்தில் செய்யுளியல் ஒரு முக்கிய பகுதி. இச்செய்யுளியலில் ஒரு பகுதியாகிய விருத்தத்திற்கென தனி விளக்க நூல் ஏதும் இல்லாத காரணத்தினால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த தி. வீரபத்திர முதலியார் என்பவரால் இயற்றப்பட்டது விருத்தப்பாவியல் என்னும் இலக்கண நூலாகும். விருத்தப்பாவியல் நூல் குறிப்பிடும் கலி விருத்த வகைகளை 2 வகைகளாகக் கூறலாம். அவை பின்வருமாறு,

- ❖ விருத்தப்பாவியல் சுட்டும் கலிவிருத்த வடிவங்கள்
- ❖ விருத்தப்பாவியல் உரை சுட்டும் கலிவிருத்த வடிவங்கள்

விருத்தப்பாவியல் சுட்டும் கலிவிருத்த வடிவங்கள்

1. வகை 1. மா கூவிளம் கூவிளம் கூவிளம் (நேர் 11, நிரை 12)
2. வகை 2. விளம் விளம் மா கூவிளம்

விருத்தப்பாவியல் உரை சுட்டும் கலிவிருத்த வடிவங்கள்

**DOI: https://doi.org/10.63300/tm12032026.34**

1. காய் காய் மா தேமா
2. மா புளிமா புளிமாங்கனி தேமா
3. மா மா மா காய்
4. மா மா மா மா

விருத்தப்பாவியல் சுட்டுகின்ற வகை 1 ஆன மா கூவிளம் கூவிளம் கூவிளம் (நேர் 11, நிரை 12), வகை 2 ஆன (விளம் விளம் மா கூவிளம்) என்னும் இரண்டு வகைகளும் விருத்தப்பாவியல் உரை சுட்டும் (காய் காய் மா தேமா) என்னும் கலி விருத்த வடிவமும் சூளாமணியில் பயின்று வருகின்றது. இவற்றை உதாரணத்துடன் விரிவாகக் காண்போம்.

வகை 1. மா கூவிளம் கூவிளம் கூவிளம் (நேர் 11, நிரை 12)

***"காத லிக்குங்க லிவிருத் தத்தொரு***

***பாத மாவருங் கூவிளம் பற்றிடி***

***னாத லானிரை நேர்க்கெழுத் தாறிரண்***

***டோதி னாரொரு பஃதுட னொன்றரோ"*** ***(வி.பா,நூ.5:1)***

மாச்சீரோடு அருமையான கூவிளம் புணருமானால் கவிகள் விரும்புகின்ற ஒருவித கலி விருத்தப்பாதமாகும். ஆகையினால் நிரை முதலடிக்கும் நேர் முதலடிக்கும் எழுத்துப் பன்னிரண்டும் பதினொன்றும் புலவர் விதித்தார். முதலிலொரு சிறுமாவும் அதன் பின்னர் மூன்று கூவிளமும் புணரும். கூவிளமேயன்றி கருவிளமும் மாவும் மாங்காயும் ஒழிபியலுள் விதிக்கப் படுவதற்கொக்க வெண்டளையிற்புணருமென்பதும், நெட்டெழுத்தீற்று விளமுஞ் சிறுபான்மையே பயிலுமென்பதும், விளங்க அருங் கூவிளம் எனப்பட்டது.

இவ்விதிக்கு உதாரணம் அப்பர் திருக்குறுந்தொகை, கம்பன் உலகம் யாவையும் தாமுள வாக்கலும் என்னும் செய்யுள் முதலியனவாம். (வி.பா.உரை.ப.21)

சூளாமணியில் 6 சருக்கங்களில் 132 பாடல்கள் 6.19% கலி விருத்தம் வகை 1 ஆன மா கூவிளம் கூவிளம் கூவிளம் (நேர் 11, நிரை 12) என்னும் கலி விருத்த வகையில் அமைந்துள்ளன. அதிகப் பாடல்கள் கொண்ட சருக்கமாக சீயவதைச் சருக்கமும், குறைந்தப் பாடல்கள் கொண்ட சருக்கமாக குமாரகாலச் சருக்கமும் அமைகின்றது.

நேரசையில் தொடங்கும் கலி விருத்தம் வகை 1 க்கு சான்றாக அமையும் நாட்டுச் சருக்கத்தில் உள்ள பாடல் சான்று பின்வருமாறு,

சங்கு நித்தில முந்தவ ழிப்பியும்

தெங்கந் தீங்குலை யூறிய தேறலும்

வங்க வாரியும் வாரலை வாரியும்
தங்கு வாரிய தண்கட னாடெலாம். (சூ.நா.ச.32)

மேற்கண்ட பாடலின் அனைத்து அடிகளும் நேரசையில் தொடங்குகிறது. அனைத்து அடிகளும் ஒற்று நீங்கலாக எழுத்தெண்ணிக்கயில் பதினொன்றாக (11) அமைந்துள்ளது. அனைத்து அடிகளின் முதற் சீரும் குறியமாவும், அடுத்த மூன்று சீர்களும் கூவிளமாகவும் அமைந்து விருத்தப்பாவியல் கூறும் கலி விருத்த இலக்கணத்தோடு பொருந்தி வந்துள்ளது.

சூளாமணியில் மா கூவிளம் கூவிளம் கூவிளம் என்னும் வாய்ப்பாட்டில் அமைந்த நேரசையில் தொடங்கும் கலி விருத்தப் பாடல்கள் எண்ணிக்கை கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | சருக்கங்கள் | பாடல் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நாட்டுச் சருக்கம் | 18 |
| 2. | குமாரகாலச் சருக்கம் | 01 |
| 3. | இரதநூபுரச் சருக்கம் | 25 |
| 4. | மந்திரசாலைச் சருக்கம் | 16 |
| 5. | சீயவதைச் சருக்கம் | 37 |
| 6. | கல்யாணச் சருக்கம் | 11 |

நிரையசையில் தொடங்கும் கலி விருத்தம் வகை 1 க்கு சான்றாக அமையும் இரதநூபுரச் சருக்கத்தில் உள்ள பாடல் சான்று பின்வருமாறு,

புரிசை நீண்மதிற் போதன மாநகர்
அரசர் வார்த்தையவ் வாறது நிற்கவே
விரைசெய் வார்பொழில் விஞ்சையர் சேடிமேல்
உரையை யாமுரைப் பானுற நின்றதே. (இ.நூ.ச.119)

மேற்கண்ட பாடலின் அனைத்து அடிகளும் நிரையசையில் தொடங்குகிறது. அனைத்து அடிகளும் ஒற்று நீங்கலாக எழுத்தெண்ணிக்கயில் பன்னிரெண்டாக (12) அமைந்துள்ளது. அனைத்து அடிகளின் முதற் சீரும் குறியமாவும், அடுத்த மூன்று சீர்களும் கூவிளமாகவும் அமைந்து விருத்தப்பாவியல் கூறும் கலி விருத்த இலக்கணத்தோடு பொருந்தி வந்துள்ளது.

சூளாமணியில் மா கூவிளம் கூவிளம் கூவிளம் என்னும் வாய்ப்பாட்டில் அமைந்த நிரையசையில் தொடங்கும் கலி விருத்தப் பாடல்கள் எண்ணிக்கை கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | சருக்கங்கள் | பாடல் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நாட்டுச் சருக்கம் | 02 |
| 2. | இரதநூபுரச் சருக்கம் | 07 |
| 3. | சீயவதைச் சருக்கம் | 15 |

வகை 2. விளம் விளம் மா கூவிளம்

***"முதலிரு சீர்விள மூன்று மாவிளம்***
***பதமது கடையினிற் பசிய கூவிளம்***
***மதியது பொருகிலா மதிதொறுங் குறைஇ***
***புதியது செய்யினும் பொருவில் பூவையே" (வி.பா.நூ.5:2)***

முதலிரண்டு சீர்களும் விளச்சீராம். மூன்றில் குறிய வீற்று மாச்சீராகும். கடைசியில் பசிய கூவிளச்சீராகும்.

இதற்கு உதாரணம் அப்பர் நமச்சிவாயப் பதிகம் (சொற்றுணை வேதியன் சோதி வானவன்) (வி.பா.உரை.ப.22)

சூளாமணியில் தூதுவிடுச் சருக்கம் தவிர்த்து ஏனைய 11 சருக்கங்களிலும் மொத்தம் 549 பாடல்கள் 25.77% கலி விருத்தம் வகை 2 ஆன (விளம் விளம் மா கூவிளம்) ஆக அமைந்துள்ளன. அதிகப் பாடல்கள் கொண்ட சருக்கமாக அரசியற் சருக்கமும், குறைந்தப் பாடல்கள் கொண்ட சருக்கமாக நாட்டுச் சருக்கமும் அமைகின்றது.

(விளம் விளம் மா கூவிளம்) என்னும் வகை 2 க்கு சான்றாக அமையும் மந்திரச்சாலைச் சருக்கப் பாடல் சான்று பின்வருமாறு,

செஞ்சினைத் தெரியலா னருளிச் செய்தது
தஞ்செவிக் கிசைத்தலுந் தணப்பில் கேள்வியா
ரஞ்சினர் நடுங்கின ராகி யாயிடை
நஞ்சிவர் வேலினான் பாத நண்ணினார் (சூ.ம.சா.ச.239)

மேற்கண்ட பாடிலின் அனைத்து அடிகளின் முதல் மற்றும் கடைச்சீர்கள் கூவிளமாக அமைந்துள்ளன. இரண்டாம் சீர்கள் கூவிளம் அல்லது கருவிளமாகவும், மூன்றாம் சீர்கள் தேமா அல்லது புளிமாவாகவும் அமைந்து விருத்தப்பாவியல் கூறும் கலி விருத்த இலக்கணத்தோடு பொருந்தி வந்துள்ளது.

தோலாமொழித் தேவர் இயற்றிய சூளாமணியில் அமைந்துள்ள (விளம் விளம் மா கூவிளம்) என்னும் கலி விருத்தப் பாடல்களின் எண்ணிக்கை கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | சருக்கங்கள் | பாடல் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நாட்டுச் சருக்கம் | 09 |
| 2. | நகரச் சருக்கம் | 22 |
| 3. | குமாரகாலச் சருக்கம் | 31 |
| 4. | இரதநூபுரச் சருக்கம் | 45 |
| 5. | மந்திரசாலைச் சருக்கம் | 71 |
| 6. | சீயவதைச் சருக்கம் | 27 |
| 7. | கல்யாணச் சருக்கம் | 57 |
| 8. | அரசியற் சருக்கம் | 131 |
| 9. | சுயம்வரச் சருக்கம் | 83 |
| 10. | துறவுச் சருக்கம் | 33 |
| 11. | முத்திச் சருக்கம் | 40 |

விருத்தப்பாவியல் உரை சுட்டும் வடிவங்கள்

**காய் காய் மா தேமா**

***"பண்ட மிழ்க்கவிப் பாக்கள னைத்தையும்" (வி.பா.நூ.5:3)*** எனத் தொடங்கும் பாடலின் உரைக்கு கீழ் இடம் பெறும் உதாரணப் பாடல் பின்வருமாறு,

மட்டுவிரி பொழிற்குன்றம் வலவந் தேறிச்
சட்டவிடா தபுமரவச் சகர்யற் போற்றி
யெட்டுருவாங் குமாரலிங்கத் திறைவன் பாதம்
மட்டுமது மலர்தூவி யஞ்சித் தானால் (வி.பா.உரை.ப.23)

மேற்கண்ட உதாரணமானது தணிகை புராணப் பாடலாகும். இதன் முதலிரு சீர்கள் காய்ச்சீராக அமைய மூன்றாவது சீரானது மாச்சீராகவும் நான்காவது சீரானது தேமாச்சீராகவும் அமைந்துள்ளது.

இதே போன்ற (காய் காய் மா தேமா) என்ற வாய்ப்பாடு அமைப்பு கொண்ட இரு பாடல்கள் சுயம்வரச் சருக்கத்தில் பயின்று வருகின்றன. அவை பின்வருமாறு,

இனையனவா மிகுசெல்வ மிங்கு மாக்கிப்

புனைமலர்வா னவர்போகம் புணர்க்கும் பெற்றி

வினையதனின் விளைவின்ன தென்று நாளும்

நினைமின்மோ நெறிநின்று நீர்மை மிக்கீர் (சூ.சு.வ.ச.1839)

மேற்கண்ட பாடலடியின் அனைத்து முதலிரண்டு சீர்களும் காய்ச் சீர்களாக அமைந்துள்ளன. மூன்றாவது சீரானது தேமாச்சீர் அல்லது புளிமாச்சீராக அமைய கடைச்சீரானது தேமாச் சீராகவே அமைகிறது. இதுவும் கலி விருத்த வகையின் ஒரு வகை ஆகும்.

சுயம்வரச் சருக்கத்தின் மற்றொரு பாடலும் இதே வாய்ப்பாட்டு அமைப்பில் அமைந்து கலி விருத்தப்பா ஆக அமைகின்றது.

**நிறைவுரை**

ஓசை நயத்தில் சிறந்து விளங்குகின்ற காப்பியமான சூளாமணியில் ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், வஞ்சி விருத்தம், சந்த விருத்தங்கள் எனப் பல வகை விருத்தங்கள் பயின்று விருத்தத்திற்கென சிறந்த காப்பியமாகத் திகழ்கிறது. சூளாமணியில் கலி விருத்தங்களின் பயில்வு முறை குறித்து விருத்தப்பாவியல் கூறும் இலக்கண வகை விளக்கம் நோக்கில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**துணைநூற் பட்டியல்**

[1]. பெருமழைப் புலவர் (உ.ஆ), சூளாமணி முதற்பாகம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட், சென்னை, முதற்பதிப்பு, 1962.

[2]. பெருமழைப் புலவர் (உ.ஆ), சூளாமணி இரண்டாம் பாகம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட், சென்னை, முதற்பதிப்பு, 1962.

[3]. சுப்ரமணியன் ச.வே., தமிழ் இலக்கியக் கொள்கை – 2, உலகத் தமிழாய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு, 1977.

[4]. சு. சாமிஐயா (ப.ஆ), யாப்பருங்கலக் காரிகை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு, 1973.

[5]. பவானந்தம் பிள்ளை (ப.ஆ), யாப்பருங்கலம் (பழைய விருத்தியுரையுடன்), மினெர்வா அச்சகம், தாம்சன் கம்பெனி, சென்னை, 1916.

[6]. முனைவர் அருணாச்சலம் மு மற்றும் முனைவர் இராஜா வரதராஜா, தமிழ் இலக்கிய வரலாறு, அருண் பதிப்பகம், திருச்சி – 1, முதற்பதிப்பு, 2012.

[7]. முனைவர் மோகனா அ, தேவார யாப்பியல், நெய்தல் பதிப்பகம், சின்னப்பா தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

[8]. வீரபத்திர முதலியார் தி, விருத்தப்பாவியல், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற்பதிப்பு, 1984.